# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60. தொலை பேசி : 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 வைகாசி—10, ஐ.அவ்வல்—22 (23 5-76) ஞாயிறு புத்தகம் 30, இதழ் 9


## உதயசூரியன் கொடியை ஏற்றினர் செல்வா!


'வாழ்க ஈழத்தமிழகம்' எனும் தமிழ் — — — — பண்ணை வெள்ளுடை தரித்த மாணவியர் எழுச்சியுடன் பாட, வெள்ளை நிறக்குல்லா அணிந்த தலைவர்களும் தொண்டர்களும் மரியாதை செய்ய, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் காந்திக்குல்லாவொன்றை அணிந்தபடி 15-5-76 பிற்பகல் 2 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் நடைபெற்ற கூட்டணி அரசியல் மாநாட்டு அரங்கில் உதயசூரியன் கொடியை ஏற்றிவைத்த காட்சி பார்ப்போர் அனைவரையும் புளகாங்கிதமடையச் செய்தது.

கொடியேற்ற நிகழ்ச்சியைத்தொடர்ந்து ஆரம்பமான அரசியல் மாநாட்டில், செல்வாவின் தலைமையுரைக்கு முன்னர், வரவேற்புக் குழுத் தலைவர் சட்டத்தரணி நா சங்கரப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினர்.

# வட்டுக்கோட்டைப்பிரகடனம்-மே22ல் ஆறு மாவட்டங்களிலும் விநியோகம்!

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கை!

வட்டுக்கோட்டை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட - - - - - - - - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் பிரகடனத்தை ஒரு துண்டுப்பிரசுரமாகத் தயாரித்து, தமிழ் ஈழமடங்கிலும் தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர்களும், கூட்டணி நடவடிக்கைக் குழு உறுப்பினர்களும் சிறிலங்காக் குடியரசு நாளான மே 22ல் பொதுமக்களுக்கு பகிரங்கமாக விநியோகிக்க விருக்கிறார்கள். தமிழ் ஈழத்தின் ஆறுமாவட்டங்களின் தலைநகர்களிலும் இந்த இயக்கம் நடைபெறும். இது ஓர் - - - - நடவடிக்கையாகவும் அதே சமயத்தில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை தமிழ்ப் பொது மக்கள் அறியச்செய்வதுமே இவ்வியக்கத்தின் நோக்கமாகும் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.



தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மாநாட்டுப் பொதுக்கூட்டத்தில் திரண்டிருந்த வெள்ளம்போல் தமிழர் கூட்டத்தின் ஒரு பகுதியினரையும், தமிழ் மகளிர் பேரவைச் செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உணர்ச்சியுடன் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா தலைமையிலும், வவுனியாவில் வவுனியா பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு, மூதூர் பா. உ. திரு. தா. சிவசிதம்பரம் ஆகியோர் தலைமையிலும், மன்னாரில் வி. என். நவரத்தினம் ஜோன் மார்க், ஆகியோர் தலைமையிலும் மட்டக்களப்பில் திரு. செ. இராசதுரை பா. உ. ஆர். அம்பலவாணர், மு. மாணிக்கம், வ. பாலசிங்கம் ஆகியோர் தலைமையிலும் திருகோணமலையில் திரு. பா. நேமிநாதன் பா. உ., திரு. அ. தங்கத்துரை பா. உ. ஆகியோர் தலைமையிலும், அம்பாறை மாவட்டத்தில் வி. ஆனந்தசங்கரி பா. உ., வி. தர்மலிங்கம் பா. உ.

—5-ம் பக்கம் பார்க்க

# அரசியலமைப்புக்கு விரோதமானவற்றை பிரசுரித்தால் அச்சகம் பறிமுதல்!

## வியாழன் நள்ளிரவு முதல் புதிய அவசரகால விதி அமுல்!

மே 20ம் திகதி வியாழக்கிழமை முதல் புதிய அவசரகாலச் சட்ட விதியை அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த விதியின்படி அரசியலமைப்புக்கு விரோதமான பிரசுரங்களை அச்சிடும் அச்சகங்கள் பறிமுதலாக்கப்படுமென்றும், அத்தகைய பிரசுரங்களை வைத்திருப்பது குற்றமான செயலென்றும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 3ம் பிரிவின் கீழ் முதலமைச்சரின் விதப்புரையின் மீது சனாதிபதியால், சனாதிபதி அலுவலகம், கொழும்பு 1976, மே 20ல் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதி பின்வருமாறு:

"3 (ஏ) (1) அரசியலமைப்பினை அல்லது அதன் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட, அல்லது தாபிக்கப்பட்டு அல்லது நியமிக்கப்பட்டுள்ளதெனக் க தப்பட்ட நிறுவனம் எதனதும் அல்லது அலுவலர்களினது அதிகாரத்தினை எவ்வகையிலேனும் மீறும்படி அல்லது மதிப்புக் குறைக்கும் வகையில் செயலாற்றும்படி அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட, அல்லது சட்டமாக்கப்பட்ட, அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட, சட்டங்களை மீறி, அல்லது அவற்றை மதிப்புக்குறைக்கும் வகையில், செயலாற்றும்படி, ஆளெவரையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தூண்டும், ஊக்குவிக்கும் அல்லது உற்சாகப்படுத்தும், எழுத்து உருவமைப்பு எதனையும் கொண்டுள்ள புத்தகம், ஆவணம் காகிதம், அல்லது பொருளை ஆளெவரும் அச்சிடுதலோ, அச்சிடுவித்தலோ, தமது உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருத்தலோ ஆகாது.

(2) ஆளெவரும், பந்தி 1ன் கீழான தவறொன்றுக்காக நீதிமன்றம் எதனாலும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுமிடத்து, அப்புத்தகம், ஆவணம், காகிதம் அல்லது பொருளை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட அச்சகம், அல்லது பிறபொறிவகையானவை இலங்கைக் குடியரசுக்குப் பறிமுதலாக்கப்பட்டனவாகக் கருதப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## வட்டுக் கோட்டை மாநாடு!

வட்டுக்கோட்டைத் தொகுதியில் நடந்துமுடிந்த தமிழர் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு சமதி தமிழ்த்தேசிய இனத்தின் முடிவான, இறுதியான மாற்ற முடியாத, வரையறுக்கப்பட்ட, திட்டவட்டமான இலட்சியம் இதுதான் என்பதை அழுத்தந்திருத்தமாகவும், ஆணித்தரமாகவும், இறுக்கமாகவும், எவ்வித ஒழிவு மறைவுக்கிடமின்றியும், தெளிவாகவும், இலங்கைக்கும் உலகுக்கும் எடுத்துக் காட்டுவதாக அமைந்து விட்டது.

அதுமட்டுமன்றி. தமிழர் கூட்டணி தன்னுடைய பெயரையே தமிழர் விடுதலைக் கூட்டணியென்று மாற்றியமைத்துக்கொண்டும் விட்டது.

இந்த மாநாட்டின் போது தமிழ் இளைஞர்கள் காட்டிய அதீத ஆர்வமும், வேகமும், உணர்ச்சியும் உத்வேகமும், மெய்சிலிர்க்க வைப்பதாக அமைந்திருக்கின்றன; விடுதலை இலட்சியத்துக்கு விசுவாசமற்ற தலைவர்கள் எவராகவிருந்தாலும் — இயக்கத்துக்குத் தம்மை முற்று முழுதாக அர்ப்பணிக்க முன்வராதவர்கள் எவராக இருந்தாலும் — அவர்கள் தமிழரசுக் கட்சியிலிருந்தாலென்ன — தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்தாலென்ன — அப்படிப்பட்டவர்கள் இயக்கத்திலிருந்து தூக்கியெறியப் படவேண்டும். தூய்மையும், வாய்மையும், நேர்மையும், துணிவுடமையும் கொண்டவர்கள் மட்டுமே இயக்கத்தை முன்னின்று நடத்தவேண்டும்; போலிகளுக்கும்பொய்யர் புரட்டர்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் புகலிடம் அளிக்கக்கூடாது என்று தமிழ் இளைஞர்கள் எழுப்பிய எழுச்சிக் குரலைக் கேட்டு— அந்த இளைஞர்களின் விழிப்புணர்ச்சியையும் சுதந்திர தாகத்தையும் பாராட்டுகிறோம்.

அதே வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல — விடுதலை இலட்சியத்தையே தமது தலைமையாக ஏற்றுக்கொண்டு வேகமுடன் கூட்டணி செயற்படும்போது, இயங்காதவர்கள் — இயங்க முன்வராதவர்கள்—தாங்களாகவே ஒதுங்கிப்போகும் காலம் மிகவிரைவில் வந்துசேரத்தான் போகிறது.

---

## சாவு நன்று!

என்னைப் போலொரு மானிடன் என்னை
எப்படித் தாழ்த்தலாம் தோழா?—அவன்
அன்னை போலவே என்னையும் அன்னை
ஆக்கினள் நானென்ன கிழா?


ஆணை செலுத்தவும் ஆளவும் இங்கே
ஆவி அவன் எடுத்தானு?—பிச்சைப்
பானை ஏந்திய கையனும் இந்தப்
பாவி பிறந்து வந்தேனு?

காற்று வானிலே சிட்டுக்கள் கண்டேன்!
களிப்பினில் என்னை மறந்தேன்!—இன்பம்
ஏற்று மறுபொழுதென்கரம் பார்த்தேன்!
இருகை விலங்கோ டிருந்தேன்!

அஞ்சி நடுங்கியும் நெஞ்சம் பதைத்தும்
ஆயுள் கழிந்தது தோழா!—உயிர்
கொஞ்சம் இருந்தது...கூறடா இந்தக்
கொடுமைக்குப் பேரென்ன ஊழா?

என்ன தமிழனே? ஏன் பிறந்தேனே?
என்னடா அடிமையின் வாழ்வு?—சீச்சி
இன்னேர் மனிதனுக் கூழியஞ் செய்தேன்
இருப்பதிலும் நன்று சாவு!

—காசி ஆனந்தன்.




# அமைச்சர்கள் விருந்துண்ண அடிவிழுந்தது தமிழனுக்கு!

## பருத்தித்துறையில் காட்டுமிராண்டித்தனம்!

## அமைப்பாளர்களின் விநோத ரசமஞ்சரி!

தமிழர் கூட்டணி மாநில மாநாட்டின் இறுதிநாளன்று பொலீஸாரின் குண்டாந் தடித்தாக்குதலுக்கு இலக்காகிய வாலிபர்களைப் பார்த்து கெக்கட்ட மிட்டுச் சிரித்தார்கள் வடபகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதற் கேற்ப அன்று சிரிப்பாய்ச் சிரித்தவர்கள் இன்று பேயறைந்தவன் கதியாக ஐந்தும் அடங்கிப் போவாயில் கை வைத்து திகைத்து நிற்கிறார்கள்.

அன்று தமிழர் கூட்டணி வாலிபர்கள் தாக்கப்பட்டபோது சிரித்தவர்கள் இன்று சிந்தனை கலைத்து பத்திரிகை நிலையங்களை நாடி, பரிவாரங்களுடன் ஓடி அறிக்கை தயாரிக்கின்றார்கள். அழாக் குறையாக மெல்லவும் முடியாமல் மீட்கவும்முடியாமல் அடித்தொண்டையில் முள்ளுப் போனவர்கள் போலக் காணப்படுகிறார்கள்.

18-5-76 தினசரிகள் பருத்தித்துறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்காரர் அல்லோலகல்லோலப்பட்ட செய்தியை வெளியிட்டன. பொலீசாரின் வெறியாட்டம் பற்றி உடுவில் அமைப்பாளர் கு. விநோதன் பொலீசாருக்கெதிராக அறிக்கை ஒன்றை ஈழநாட்டில் விட்டிருந்தார். அதில் அரசாங்க மந்திரிகள் வந்த கூட்டத்திற்கே பொலீசார் கும்பம் வைக்கவிடவில்லை; தோரணம் தூக்க விடவில்லை, மாலை போட்டு மண்டியிட விடவில்லை; மாலை போட்டால் கைது செய்வோமென்று பொலீசார் கூறினர். திறந்திருந்த கடைகளை மூடிவிடுமாறு கட்டளையிட்டனர் என்று கூறும் விநோதனின் அறிக்கையில் அரசியல் கட்சிக் கூட்டங்களுக்கு பொலீசார் செய்யும் அக்கிரமங்களை சாடியுமிருக்கிறார்.

அத்துடன் [illegible] செய்தியையும் ஈழநாட்டில் கட்டிக் காட்டியுள்ளார். அதாவது பொலிசாரின் இத்தகைய அக்கிரமங்கள் காரணமாக உடுவில் தொகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட மே 22 குடியரசு தினத்தை கொண்டாடுவதில்லை என்றும் வேறு கூப்பாடு போட்டுள்ளார்

இந்த விநோத ரசத்தை ரசித்துக்கொண்டு நடராசாவின் கூட்டத்தில் நடந்ததென்ன என்பதை அறிய பருத்தித்துறை சென்றிருந்தேன். அன்று கூட்டத்தில் கலந்து கொண்ட பலருடனும் கலந்துரையாடினேன். பொலீசாரின் செயல் அக்கிரமம் அநியாயம் என்று கூறினர்.

அமைச்சர்கள் ஆரியதாசாவும், குமாரசூரியரும் கலந்து கொண்ட கூட்டம் முடிவுற்றதும் அமைச்சர்கள் மேடையை விட்டிறங்கிச் சென்றதும், மேடையில் பேசப்பட்ட ஒரு பொடியனின் பேச்சைக் கேட்ட பொலீசார் பொது மக்களைப் பழிவாங்கினர். பொலீசாரை கண்டபடி ஏகிய பருத்தித்துறை தொகுதி ஸ்ரீ. ல. சு. கட்சி அமைப்பாளரின் மகன் பொலீசாருடன் சொற்போர் புரிந்ததின். காரணமே இந்தக் கலவரத்திற்குக் காரணம் என்று கூறினர்.

இரவு ஒன்பது மணிக்குப் பின்ஒலிபெருக்கி பாவித்தது குற்றமானல் பொலீசார் அமைப்பாளரையும் அன்றைய கூட்ட அழைப்பாளர்களையும் கைது செய்திருக்கலாம். அல்லது அவர்கள் மூலம் கலை நிகழ்ச்சிகளை ரத்தாக்கியிருக்கலாம். அதற்குப் பதிலாக காணிவலில் பொலீசார் தாக்கிய வழக்கிற்குப் பதிலடி கொடுப்பதுபோல அன்றிரவு எதுவித முன்னறிவித்தலுமின்றி இருமுழு மந்திரிகள் அயலில் அமைப்பாளருடன் விருந்து உண்டு களித்திருக்க ஏனைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் அணிதிரண்டிருக்க அவர்களிடம் எதுவித முறைப்பாடுமின்றி பொலீசார் பொது மக்களை மூட்டு மூட்டாக முறித்து சாக்கடைகளில் தள்ளி, ஓட ஓட விரட்டி விசர் நாய் ஆட்டம் ஆடியிருக்கிறார்கள்.

அயலிலுள்ள வீடுகளில் இரவு புகுந்து அங்கு நின்றோரைத் தாக்கியிருக்கிறார்கள். சிறுவர் சிறுமியர் மக்களுக்குள் அகப்பட்டு நெரிந்து அழுது குளறி ஓடியிருக்கின்றனர். தமிழாராய்ச்சி சம்பவம் போல் செருப்புளை விட்டும், சயிக்கிள்களை விட்டும், தாலியைப் பறிகொடுத்தும் உயிர்தப்பினல்போதும் என்று மக்கள் சிதறிச்சின்னபின்னமாகி ஓடியிருக்கிறார்கள்.

இன்று பருத்தித்துறை வாழ் தமிழ்பேசும் மக்கள் தமிழனுகப் பிறந்தவன் ஆளும் கட்சியாக இருந்தாலென்ன எதிர் கட்சியாக இருந்தாலென்ன கிடைக்கும் சாத்துப்படியின் கனம் கொஞ்சமும் குறைவற்றது என்று குமுறுகிறார்கள்.

அப்பாவி மக்களை—பெண்களை குழந்தைகளை சிங்களப் பொலிசார் வெறிபிடித்து தாக்கிய போது, அங்கு நின்ற தமிழ் பொலிசார் சிங்களத்தில் 'காண்ட எப்பா' என்று எத்தனையோ தடவை சத்தமிட்டும், சிங்களப் பொலிசார் வெறியாட்டம் ஆடியிருக்கின்றனர். தமிழ் பொது மக்கள் வேட்டை நாய்களால் இவ்வாறு அடித்து வீழ்த்தப்பட்ட நேரத்தில் அமைச்சர்கள் விருந்துண்டு களித்தார்களாம்.

அற்ப சொற்ப சலுகைகளுக்காக கூட்டுறவுக் கடைகளிலும், கோப்பறேசனிலும் வேலை பார்த்து வரும் வாலிபர்கள் தமிழனுக்கு சிங்கள அரசு செய்யும் கொடுமைகளுக்கு மத்தியிலும், நாங்கள் அரசு ஆதரவாளர்கள் என்று கூறித்திரிவது வெட்கம்; வெட்கம், விநோதனும் மற்றும் அமைப்பாளர்களும் தமது அங்கத்தவர்களே அடிவாங்கியுள்ளார்கள். என்று அலற்றுகிறார்கள்.

—5-ம் பக்கம் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து இயங்காத தலைவர்கள் வெளியேறட்டும்

## தமிழர் மகளிர் பேரவை மாநாட்டில் நிறைவேறிய சூடான தீர்மானம்!

"தமிழர் விடுதலைக் கூட்டணி இதுவரை காலமும் இயங்கியது போல மந்த கதியில் இயங்காது—தீவிரமாக இயங்கவேண்டும். இருக்கின்ற தலைவர்களில் ஒரு சிலர் பாடுபட, ஒரு சிலர் தங்கள் சொந்த வேலைகளை மட்டும் பார்க்காமல் — விடுதலைக்காகவும் இனத்துக்காகவும் —முழுமூச்சுடன் அனைவரும் இயங்கவேண்டும். இயங்காத தலைவர்களின் தலைமை எங்களுக்குத் தேவையில்லை. அவர்கள் ஒதுங்கிக் கொண்டு—இயங்கக் கூடியவர்கட்கு இடமளிக்கவேண்டும்."

மேற்கண்டவாறு தமிழ் மகளிர் பேரவையின் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி எடுக்கின்ற தீவிரமான இயக்கங்களுக்கு — மகளிர் பேரவை தன் முழு ஒத்துழைப்பையும் நல்கும் எனக் கூறும் மற்றோர் தீர்மானமும் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்கள் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் 15-5-76 பிற்பகல் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாதர் இயக்கமான தமிழ் மகளிர் பேரவையின் மாநாட்டில் மேற்படி பேரவையின் பொதுச் செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் முன்மொழிய, திருமதி கலா தம்பிமுத்து வழிமொழிய ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மகளிர் பேரவை மாநாடு தொடங்கப்படுவதற்குமுன் சிறையிருக்கும் தமிழ் வீரன் வண்ணை ஆனந்தனின் மறைந்த தாயாருக்கு இரண்டு நிமிட நேரம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இம்மாநாட்டுக்கு தியாகி சிவகுமாரனின் தயார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை தலைமைவகித்தார். அவர் பேசும்போது கூறியதாவது!-

"தாய்க்குலத்தின் மானம் காக்க தமிழ்ப்பெண்கள் எல்லோரும் முன்வரவேண்டும். தமிழ் உரிமைக்காகப்போராடிய எம் இளைஞர்களை சிறையினுள் சித்திரவதைபடைய விட்டு நாம் மட்டும் இருக்கின்றோம். இனிப் பெண்களும் உரிமைப்போருக்குப் புறப்படவேண்டும்.

எமது இளம் பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் விடுதலை வீரர்களையே தமது வாழ்க்கைத் துணைவராகத் தெரிந்தெடுக்கவேண்டும் — இந்த எண்ணமே இப்போது எம் இளம் பெண்களிடையே பரவலாக நிலவி வருகிறது." எனக் குறிப்பிட்டார்.

அவரைத் தொடர்ந்து பேசிய செல்வி திலவதி கணபதிப்பிள்ளை-"ஒரு நாட்டின் சனத்தொகையின் அரைப் பங்கு பெண்களே. இதன் மூலம் அந்நாட்டின் சக்தியில் அரைப்பங்கு பெண்களின் சக்தியே. ஆகவே அவ் அரைப்பங்கு சக்தி ஏன் செயலற்றதாக விரயமாக்கப்படவேண்டும்."

"உலக நாடுகளின் விடுதலை வரலாற்றிலே வீரர்களுக்கும் தியாகிகளுக்கும் பெண்களே உந்து சக்தியாக விளங்கியிருக்கிறார்கள் — அண்ணல் காந்திக்கு கஸ்தூரிபாய் அம்மையாரும், நேப்போலியனுக்கு அவள் அன்னையும் 'ஏன் எம் விடுதலைப்போரில் எமக்கு முன்னோடியாக அண்ணன் அமிர்தலிங்கத்திற்கு அக்காள் மங்கையர்க்கரசியும் சக்திகளாக நின்று செயற்படுகிறார்கள். எனவே விடுதலைப்போரில் எமது பங்கை நாம் செய்வோம் — எமது இளைஞர்கள் — ஆண்கள் நடத்தும்போராட்டத்திற்கு நாம் சக்திகளாக விளங்குவோம்' எனக்குறிப்பிட்டார்.

திருகோணமலையைச் சேர்ந்த திருமதி பிலோமினா லோரன்ஸ் பேசுகையில்:-

"பெண்கள் அரசியலில் ஈடுபடுவது புதியது ஒன்றல்ல, சங்க காலத்தின் கண்ணகி பாண்டியன் அவையிலே நீதிக்காக வழக்குரைத்ததும் அரசியலே. நாமும் எமது வருங்கால செல்வங்களில் உரிமைகளுக்காக, வளமான வாழ்விற்காக அரசியலில் ஈடுபடவேண்டும். வடக்கும் கிழக்கும் பேதங்களை மறந்து ஒற்றுமைப்படவேண்டும்." என்றார்.

திருமதி. சுபைதா உதுமாலெப்பை பேசுகையில் கூறியதாவது:-

"மதத்தால் வேறு பட்டிருந்தாலும் நாம் இனத்தால் மொழியால் ஒன்று பட்டவர்கள்—

இந்நாட்டின் சொந்தக்காரர்களான நாம் — வந்தேறு குடிகளாக [illegible] படுகின்றோம் — [illegible] அற்றவர்களாக இருக்கின்றோம். இதற்கு ஒரே வழி எம்மை நாம் ஆள்வதுதான். நாம், நமது ஆண்கள் போராடும்போது பக்கபலமாக நிற்போம்; அவர்களுக்கு நாம் புத்துணர்ச்சியும், உத்வேகமும் கொடுப்பவர்களாக விளங்குவோம், எனக் குறிப்பிட்டார்.

திருமதி அமிர்தலிங்கம் கூறியதாவது:—

இன்று எமது இளைஞர்கள் —சித்திரவதையடைகிறார்கள் — அவர்களைப் பெற்ற அன்னையர்கள் கண்ணீர் வடிக்கின்றார்கள். தாம் பெற்ற பிள்ளைகள் எங்கே? உண்டாரோ? உறங்கினரோ? என்பதைக் கூட அறிய முடியாதவர்களாக காட்டிலும் மேட்டிலும் பிள்ளைகளை அலையவிட்டுத் தவிக்கின்றார்கள் எனவே, நாம் ஆதிக்கம் பரவவிடமாட்டோம் அதற்கு அனுமதிக்கவும் மாட்டோம். அதற்காக எமது வீடு, எமது பிள்ளைகள், எமது குடும்பம் என் என்பதைவிட எமது நாடு, எமது இனம் என்று நாமினி வாழவேண்டும்.

இம்மாநாட்டில் திருமதி அருணாசலம், செல்வி சபாரெத்தினம், சங்கானை அம்மா உட்படப் பலர் உரை நிகழ்த்தினர் — இம்மாநாட்டில் இளம் பெண்களும், தாய்மார்களும், முதியவர்களுமாக மண்டபம் நிறைந்திருந்தது குறிப்பிடத்தக்கது; இம்மாநாட்டின் இறுதியில் மகளிர் பேரவையின் தீர்மானங்களையும், செயற்பாட்டையும் பாராட்டி உடுப்பிட்டி மு. சிவசிதம்பரம் உரையாற்றுகையில்

"பல நாடுகளில் விடுதலைப் போராட்டங்களில் பெண்களின் பங்கு முக்கிய இடம் பெற்றிருக்கிறது. அவர்களுக்கு எந்த விதத்திலும் எமது தமிழ்ப் பெண்கள் பின்நிற்க மாட்டார்கள் என்பது எமது நம்பிக்கை. எமது இளைஞர்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டுமெனில் தாய்மார்கள் தமது பிள்ளைகள் அரசாங்க உத்தியோகம் பார்க்கவேண்டும் என்று விரும்பாதீர்கள். எமது இளம் பெண்கள் அரசாங்க உத்தியோகமில்லாத [illegible] மணம் முடிக்கத் [illegible] என்றார்.

## கைதான இளைஞர்கள் எங்கே?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டின் போது பொலிசாரின் மிருகத்தனமான காரணமற்ற தாக்குதலுக்கிலக்காகியதுடன், பொலிசாரால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள், பொலிஸ் காவலுடன் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்தனர் இப்போது இந்த இளைஞர்களில் பத்துப்பேர் சிறைச்சாலை ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அங்கு இவர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## மறக்கமுடியாத மாநாட்டுக்காட்சிகள்!

வட்டுக்கோட்டையிலே நடைபெற்ற கூட்டணியின் மாநாடு எழுச்சி மாநாடாக —எங்கும் தமிழ் உணர்ச்சி மாநாடாக, அமைந்திருந்தது. எங்கெங்கோ இருந்து புறப்பட்ட தமிழ்ச் சிற்றாறுகள் எல்லாம் வட்டுக்கோட்டைப் பெருங்கடலில் சங்கமித்தனவோ என எண்ணத் தோன்றும் தமிழ்க் கடல் தலை அலைகள்;

வழியெங்கும் முழுமையான—வாழை—தென்னை —பனை—கமுக மரங்கள் திடீரென தழைத்து பசுமை குறையாது வருவோரையெல்லாம் ஆடி அசைந்து வரவேற்ற அழகுறு காட்சி—

மாவும், பூவும், மகர தோரணமும் மணிப்பந்தல்களும், மாலை அலங்காரங்களும் மங்கல இசை யொலியும்—எங்கும் உச்சக்கம்பங்களில் உயரப் பட்டொளி விசிப் பறந்து கொண்டிருந்தன உதய சூரியன் கொடிகள்.

வருவோரையெல்லாம் வருக, வருக என ஒலி பெருக்கி மூலம் வரவேற்றுக் கொண்டிருந்தனர். வந்தவரை இன்முகம் காட்டி உபசரித்து உணவிற்கும், உறையுளுக்கும் உரிய இடத்தைக்காட்டி—ஒழுங்கு செய்தனர். வரவேற்புக் குழுத் தொண்டர்கள்

உதயசூரியன் சின்னமணிந்த வாலிபரும், வாலையரும் வண்டுகள் போன்ற சுறுசுறுப்பான தொண்டர்களாய் இயங்கிக் கொண்டிருந்தனர்.

காந்திக் குல்லாயும், உதய சூரியன் சால்வையும் அணிந்த வண்ணம் தலைவர்களும், தொண்டர்களும், பார்வையாளர்களும் சுறுசுறுப்புடன் நடமாடிய காட்சி கண்கொள்ளாக் காட்சி.

வெளியூர் விருந்தினர்க்கு இல்லையெனாது எந்நேரமும் அறுசுவை உண்டி விருந்து மண்டபத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. பஞ்சமெனப் பதறும் இந்நாளிலேயே பஞ்சாமிர்தம் படைக்கின்றார்களே—இலட்சியம் நிறைவேறினால் பஞ்சமென்ற சொல்லுக்கே இடமில்லை என எண்ணத்தோன்றுமளவிற்கு விருந்துபசாரம்;

மங்கையர் மங்கல வாழ்த்திசைக்கத்தொடங்கியது மாநாடு. மாநாட்டு மண்டபம்— திரண்டிருந்த மக்களை உள்ளடக்கமுடியாமல் நிறைந்து பிதுங்கி, வழிந்து கொண்டிருந்தது. அங்கு உணவுக்குக் குறைவில்லை— இங்கு உணர்ச்சிக்குக் குறைவில்லை என்று பார்ப்போர்கள் கூறுமளவிற்கு —தொண்டர்களை மீறி மண்டபத்தினுள்ளே நுழைந்திட போட்டி போட்டு நுழைந்து கொண்டிருந்தனர் மக்கள். தலைவர்களின் உரைகேட்க அத்தனை தவிப்பு.

முறங்கொண்டு புலி கலைத்து மறங்காட்டி மாண்பு கொண்ட புறம்கூறிய பூவையர்க்கு சிறிதும் நாம் சளைத்தவர்கள் அல்ல என்று அறைகூவிப் பறைசாற்றி நடந்தது மகளிர் மாநாடு. தாய்குலத்தின் முடிவினைக் கேட்பதற்கு தனயர் கூட்டம் தவிப்போடும் — ஆர்வத்தோடும் மண்டபத்தின் வெளியேயும் உள்ளேயும் கூடி நின்றதும் ஒரு காட்சி.

முத்தமிழ்க் கலையாவும் முழங்கியது கலை அரங்கு—உணர்ச்சிப்பேச்சுகளால் சிந்தனை சிதறல்களால்சிறிது களைப்படைந்த மக்களுக்கு புதுத்தெம்பு ஊட்டின கலை நிகழ்ச்சிகள்.

நாம் பிறந்த மண்ணிலே நாம் நடந்து செல்ல உரிமையில்லை- ஊர்வலம்போவதா? உடனடியாய் நிறுத்து. இது ஊர்க்காவலர் உத்தரவு— வாகனங்களில், வண்டில்களில் உதயசூரியன் கொடி அசைந்தாட சென்ற காட்சியும், சிலர் நடந்தும் ஒன்றன்பின் ஒன்றாகசென்ற காட்சியே —ஓர் ஊர்வலந்தான். நடத்தாதே எனச்சொன்ன ஊர்வலமும் நடக்கிறதே என்றெழுந்த நமைச்சல் தான் காரணமோ! நகர்க் காவலர் நம் இளைஞர் மீது நாய்ப்பாய்ச்சல் பாய்ந்ததற்கு! காக்கிச்சட்டையினர் காற்றையும் திறந்துவிட்டார் கார்களுக்கு இது அவர் காடைத்தனம்.

—4-ம் பக்கம் பார்க்க

## மாற்றரும் மதிக்கும் மாணிக்கத் தலைவன்!

"நான் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மீது அதிக மதிப்பு வைத்துள்ளேன். அவர் எனது காரியாலயத்துக்கு வந்தால் எழுந்து நின்று தான் வரவேற்பேன். அவர் ஆசனத்தில் அமர்ந்த பின்பு தான் நானும் எனது ஆசனத்தில் அமர்வேன். அவர் முதிர்ந்த அரசியல்வாதி, அத்துடன் கல்விமான். எனவே தான் அவர் மீது நான் பற்றுவைத்துள்ளேன்"

—உள்ளூராட்சி அமைச்சர்
திரு டபிள்யூ. பி. ஜி. ஆரியதாச.
(வீரகேசரி 17-5-76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவிடுதலை இலட்சியத்தை ஏற்காதவர்கள் கூட்டணியிலிருந்து தூக்கியெறியப்படுவார்கள்!

## —'அமிர்'

பண்ணாகம், மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் 'அமரர் இராசமாணிக்கம்' அரங்கில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகள் மாநாட்டில் கூட்டணியின் அரசியல் பிரகடனத்தை முன்மொழிந்து பேசுகையில் நாவலர் அ. அமிர்தலிங்கம் பின்வருமாறு கூறினார்.

"இதுவரை நாம் நடத்திய பல்வேறு மாநாடுகள் கட்சி மாநாடுகளாகும். இம்மாநாடு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமிழர் கூட்டணியாக இணைந்த பின்னர் கட்சி கடந்த நிலையில் நடைபெறும் முதல் மாநாடாகும்; கடந்த நாலு வருடங்களில் தமிழர் கூட்டணி இலட்சிய அடிப்படையில் வளர்ச்சி அடைந்து வந்துள்ளது.

இதனாலேயே இதுவரை தமிழர் கூட்டணி என்றிருந்த பெயரை தமிழர் விடுதலைக் கூட்டணி என்று மாற்றியுள்ளோம். இதில் அங்கம் வகிப்போர்—கூட்டணியின் கொள்கையை ஏற்காவிடில் அவர்களுக்கு இங்கு இடமில்லை இலட்சியத்தில் இருந்து தவறுபவர்களை—தூக்கியெறிந்துவிட்டு இயக்கத்தை வளர்ப்போம். எனவே எமது இளைஞர்கள் தமது எண்ணத்தை சிதறவிட வேண்டாம். நாம் ஒற்றுமையாக இயங்க வேண்டும். விடுதலையெனும் புனித இலட்சியமே நமக்கு தலைமை; நம்முடைய நோக்கம், குறிக்கோள் எல்லாம். எனவே வேறு சிந்தனைகளின்றி விடுதலைக்காக உழைப்போம்!"

நாவலர் அமிர்தலிங்கத்தைத் தொடர்ந்து உடுப்பிட்டி சிவா உரையாற்றுகையில் கூறியதாவது:-

எங்கள் கோரிக்கையை அடுத்து அரசாங்கம் எடுக்கக்கூடிய எல்லாவித மான நடவடிக்கைகளையும் நாம் எதிர்பார்த்தே இருக்கின்றோம். இப்பொழுதும் 54 இளைஞர்கள் சிறையில் இருக்கின்றார்கள். அதே போல் இன்னும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சிறை செல்ல ஆயத்தமாக இருக்கிறார்கள்: காலம் வரும்போது, அழைப்புவரும் போது ஒவ்வொருவரும் தம் கடமைகளைத் தவறாதுசெய்வார்கள்."

"இலங்கரெத்தினவும் இலை அமைச்சர்களும் முன்பு தமிழர் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டுவிட்டன என்று கூறியவர்கள்—இப்பொழுது பிரச்சினைகள் உண்டு; அவற்றிற்குத் தீர்வு காணவேண்டும் என்றும் அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டுவரப்போவதாகவும் கூறுகின்றார்கள். இவையெல்லாம் ஆகஸ்ட் மாதத்தில் பிறநாட்டுத் தலைவர்கள் வரவிருப்பதனால் அவர்களுக்குக் காட்டுவதற்காக, வெறும் கண்துடைப்புக்காக கூறுகின்றார்கள். இவற்றையெல்லாம் இனி நாம் நம்பவோ ஏற்கவோ தயாராகவில்லை.

டாக்டர் உதுமாலெப்பை பேசியபோது கூறியதாவது!

இஸ்லாமியனும் தமிழன் தான், அவர்களுக்கும் தமிழ் உணர்வு உண்டு. இன்று நூற்றுக்கணக்கான இஸ்லாமிய இளைஞர்கள் இங்கு வருகை தந்துள்ளார்கள். அண்மையிலே இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் சிறையிலே இருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யவேண்டும், அல்லது நீதிவிசாரணைக்குக்கொண்டு வரவேண்டும் என்று அம்மையாருக்கு அறிக்கை விட்டுள்ளது. தந்தை செல்வாவின் பிறந்த நாள் பெருவிழாவில் கலந்து கொண்ட டாக்டர் எம். சி. எம். கலீல் அவர்களையும் ஒரே அணியில் இணைத்த பெருமை தந்தை செல்வாவைச் சார்ந்ததே.

இதுவரையில் தமிழ்த் தலைவர்களைத் தாக்குவதற்கு சிங்களவர்கள் முஸ்லிம் மக்களைப் பயன்படுத்தி வந்தார்கள். நாம் ஒரு தாயின் பிள்ளைகள், வேறு மதங்களைப் பின்பற்றுபவர்கள் என்பதால் தமிழ் மக்களைப் பிளவுபடுத்தி தம் காரியங்களைச் சாதிக்கின்றார்கள். ஆனால் அண்மைக்காலத்தில் நடந்த சம்பவங்கள் முஸ்லிம்களை விழிப்படையச் செய்துள்ளன; பார்ப்பதற்கு இஸ்லாமியர்கள் இயக்கமின்றி இருப்பது போன்று தோன்றினாலும் பனிப்படலங்களின் கீழ் பாய்ந்தோடும் பேராறுகள் போல் இஸ்லாமியர்கள் தமிழ் உணர்ச்சிமிக்கவர்களாகவே இருக்கின்றார்கள். இஸ்லாமிய இளைஞர்களிடையே கிராமம் கிராமமாகப் பல கிளைகளை அமைத்து நாம் இயங்கிவருகின்றோம்!, என்றார்.

திரு. குணரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில் 'அந்நியன் வந்து புகல் என்ன நீதி?" என்று இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது வெள்ளையனைப் பார்த்து பாரதி கேட்டான். அதே போல தமிழ் மக்களிடையே பலவித சாதிப் பிரச்சினைகள் பிரிவுகள் உண்டென்றாலும், அந்நியனான சிங்களவர் எம்மை ஆளுவதற்கு இடம் தரமாட்டோம், சிறுபான்மைத் தமிழர்களும் விடுதலைப் போராட்டத்திலே தோளோடுதோள் நின்று போராடுவார்கள்.

மட்டக்களப்பு முதல்வர் திரு. செ. இராசதுரை தீர்மானத்தை ஆதரித்துப்பேசுகையில்-துரியோதனனிடம், பாதி இராச்சியம் கேட்டு, ஐந்து நாடு கேட்டு, ஐந்து நகரம் கேட்டு, ஐந்து ஊர் கேட்டு, ஐந்து வீடுகேட்டு, அனைத்தும் மறுக்கப்பட்ட நிலையில் தருமர் போர் பிரகடனம்செய்ததுபோன்று, தந்தை செல்வா அவர்களும், சமாதானமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கமுயன்று, முடியாத நிலையில்,இன்றுபோர்ப் பிரகடனம்செய்திருக்கிறார்;இந்த சுதந்திரப்போரை நடத்தி நாம்வெற்றிகாணவேண்டும். தந்தையின் காலத்திலேயே நம் இலட்சியம்நிறைவேறட்டும்" என்று கூறினார்.

# இரண்டு மாதங்களுக்குத் தீவிர சாதியொழிப்பு இயக்கம்

## தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானம்!

தமிழினத்தைப் பீடித்திருக்கும் சாதியையும் தீண்டாமையையும் வேரோடு சாய்க்கவும் சாதியொழிப்பு பிரசாரத்திலும், நடவடிக்கைகளிலும் ஈடுபடவும், தொடர்ச்சியாக இரண்டு மாதங்களை ஒதுக்கி, அந்த இரண்டு மாதங்களையும் தீண்டாமை—சாதியொழிப்பு மாதங்களாகப் பிரகடனப்படுத்தி—அந்த இயக்கத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் அனைவரும் ஈடுபட வேண்டுமென்ற தீர்மானம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கூட்டணியின் அரசியல் மாநாட்டில் இந்தத் தீர்மானம், உடுப்பிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடியினால் முன்மொழியப்பட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா, பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம் ஆகியோரினால் வழிமொழியப்பட்டது.

மேற்கண்ட தீர்மானத்தை முன்மொழிந்து திரு. ஜெயக்கொடி கூறியதாவது:-

'தமிழர்களாகிய நாம் எமக்கு விடுதலை கோரும் அதே நேரத்தில் எம்முள் இருக்கும் வேற்றுமைகளை ஒழிக்கும்விதமாக சாதி ஒழிப்பில் தீவிரமாக ஈடுபடவும் வேண்டும். இதற்காக இரண்டு மாதங்களை சாதி ஒழிப்பு மாதங்களாக பிரகடனப்படுத்தி தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அனைவரும் அதில் பங்குபற்ற வேண்டும் என்றார்:

இதை பருத்தித்துறைப் பா.உ. சட்டத்தரணி திரு. க. துரைரத்தினம் வழிமொழிந்தார்.



இத்தீர்மானத்தை ஆதரித்து தமிழீழத் தந்தை செல்வா அவர்கள் கூறியதாவது:-

"இந்தியாவிலே, ஹரிஜனங்கள் என்று கூறி ஒரு பகுதி மக்களை ஒதுக்கிவைத்தார்கள். அதனால் பிரித்தானியர்களுக்கு அடிமைப்பட்டிருந்தார்கள். அப்பொழுது பிரதம நீதியரசராக இருந்த ஒரு பிரமுகர் சொன்னார்— "நாங்கள் எங்களுக்குள் ஒரு பகுதியினரை அடிமையாக வைத்திருக்குமட்டும் எங்களின் அடிமைத்தனம் தீராது என்று. காந்தியின் தலைமை வந்த பின்னர் அவர்கள் அதை உணரத் தொடங்கினர். இந்திய மக்கள் உணரத் தொடங்கிய பின் ஆங்கிலேயர் வெளியேறிவிட்டார்கள். இந்த நாட்டில் தமிழர்களுக்கு நான் கூறிவைக்க விரும்புகிறேன். நாமும் இதையே செய்யவேண்டும் அல்லாது போனால் அடிமைத்தனத்திலிருந்து மீட்சிபெறமுடியாது.

## மறக்க முடியாத..

—3-ம் பக்கத் தொடர்

"வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீரம் கொள் கூட்டம்." "இப்படைதோற்கின் எப்படை வெல்லும்" "மறவர் படைதான் தமிழ் படை தமிழ் மானம் ஒன்றே அடிப்படை"

என்ற கவிஞர் திருவாக்குகளுக்கு பொருள் கொடுத்து மனிதப் பிரளயமாக அரை இலட்சத்துக்கும் அதிகமாக அலைமோதிய தமிழர் கூட்டத்தைக் கண்டு அம்மையாரும், ஆளுவோரும், அடிவருடிகளும் ஆட்டம்கொண்டிருப்பர். திரண்டெழுந்த திராவிடர் படைகண்டு [illegible] ...ல் ஐயம் [illegible] இல்லை.

## பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை!


தமிழர் விடுதலைக்கூட்டணியின் அடிப்படை இலட்சியத்தை வென்றெடுப்பதற்குசாத்திய மற்ற எந்த விதமான சமாதானங்களுக்கும் சமரசத்துக்கும்,பேச்சுவார்த்தைக்கும் உடன்படிக்கைகளுக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணி இடமளிக்கக்கூடாதென்றும்,எந்த ஒரு சிங்கள அரசுடன் என்றாலும், இந்த அடிப்படையான நிலையிலிருந்து பிறழ்ந்து கூட்டணித் தலைவர்கள் எவரும் பேச்சுவார்த்தைக்கு செல்லக்கூடாதென்றும், வட்டுக்கோட்டையில் 15.5,76ல் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு தீர்மானித்துள்ளது. தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையும் சமர்ப்பித்திருந்த இந்தத் தீர்மானம் ஏகமனதாக பிரதிநிதிகள் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது


### மில்க்வைற் செய்தி இதழ்-5

10 மில்க்வைற் நீல சோப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மில்க்வைற் சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பிவைத்து மில்க்வைற் செய்தி இதழ் - 5 பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம் யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



தமிழ் இளைஞர் பேரவை மாநாட்டுக்குத் தலைமைவகித்து ஆ. ரகுபதிபால சிறீதரன் பேசுவதையும ...ாநாட்டில் கலந்துகொண்ட ...
ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்

# "இயக்கத்தின் முழுநேர ஊழியர்களாக கூட்டணி பா.உ.க்கள் மாறவேண்டும்!"

## தமிழ் இளைஞர் மாநாட்டில் எழுச்சிக் குரல்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில்தேசிய அரசுப் பேரவைக் குச்செல்வோர் இயக்கத்தின் முழுநேர ஊழியர்களாக இயங்க வேண்டுமென்றும், இதைச் செயற்படுத்த முடியாதவர்கள் தேசிய அரசுப்பேரவையிலிருந்து ஒதுங்கிக்கொண்டு முழுநேரமும் இனவிடுதலைக்காக உழைக்கத்துடித்து நிற்கும் இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்றும், சுதந்திரப்போராட்டத்தில் பகுதிநேர அரசியல்வாதிகளுக்கு இடமில்லையென்றும், இது விஷயத்தில் இந்தியவிடுதலைப் போராட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் காட்டிய முன்மாதிரியை நமது தலைவர்களும் பின்பற்றவேண்டும் என்றும் பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழ் இளைஞர்பேரவை மாநாட்டில் பேசிய திரு. கருணானந்தசிவம் தமிழ் இளைஞர்களின் உள்ளக்குமுறலை சரிவர எதிரொலித்தார்—

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டின் ஓர் அங்கமாக நடைபெற்ற தமிழ் இளைஞர்பேரவையின் மாநாடு 15-5-76 பிற்பகல் பண்ணாகம்மெய்கண்டான் மாவித்தியாலயத்தில் 'சிவகுமாரன் அரங்கில்' நடைபெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் குத்துவிளக்கேற்றி மாநாட்டை தொடங்கி வைத்தார். செல்வன் பரணிதரன் தமிழ் வாழ்த்துப்பாடினார்.

தமிழ் இளைஞர்பேரவையின் இடைக்கால அமைப்பாளர்களில் ஒருவரான திரு. ஆ. ரகுபதிபால சிறீதரன் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் பின்வரும் தலைப்புக்களில் பின்வருவோர் உரையாற்றினர்.

......ஈழ ஆட்சியமைப்பு —திரு. கருணானந்தசிவம்.

சிறுபான்மை தமிழர் பிரச்சினை—திரு. கனகமனோகரன்

.........ஈழத்தின் பொருளாதாரம் — திரு. இறைகுமாரன்.

மலையகத் தமிழர் பிரச்சினை—திரு. விக்கினராசா.

ஆட்சியாளருடன் பேச்சுவார்த்தை— திரு. பன்னீர் செல்வம்.

சிறையிலிருக்கும் இளைஞர்கள் — திரு. பாலேந்திரன்.

தமிழ் தொழிற்சங்கங்களின் அவசியம்—திரு தங்கவேலாயுதம்.

ஈழத்தில் கள்ளக் குடியேற்றம் — திரு. கா. அன்ரன்.

தமிழரும் குடும்பக்கட்டுப் பாடும்—திரு. மதிமுகராசா.

மலையகத்தமிழரும் குடியேற்றமும் — திரு. சு. க. மகேந்திரன்.

......ஈழம் சோசலிச குடியரசாகவேண்டும் — திரு. ஞானம்.

வரவேற்புரை நிகழ்த்திய திரு. பீறறர் பொன்கலன் கூறியதாவது:- 'இளைஞர்களாகிய நாம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு கட்டுப்பட்டு அவர்களின் எந்தப் போராட்டத்திலும் முன்னின்று உழைக்கத்தயாராயிருக்கிறோம். இதற்கான அமைப்புவேலைகளை செய்துகொண்டு வருகிறோம். இந்தப்பணியில் வெற்றிபெற எல்லா இளைஞர்பேரவை உறுப்பினர்களும் முன்னின்று உழைக்கவேண்டும்.

தலைமையுரை நிகழ்த்திய திரு. இரகுபதிபாலஸ்ரீதரன், தமிழர் விடுதலை கூட்டணியின் அரசியல் பிரகடனத்தை நிறைவேற்றும்பணியில் இளைஞர்பேரவை முன்னின்று உழைக்கும். இளைஞர்கள் உணர்ச்சிவசப்பட்டாலும் கட்டுப்பாட்டை மீறமாட்டார்கள் இயங்காத தலைவர்களையிட்டு குறைபடுவதைவிட்டு, எல்லாத்தலைவர்களையும் இயங்கவைப்பது எமது பொறுப்பாகும். இயங்க முடியாத தலைவர்கள் நமக்கு தேவையில்லை. அவர்களை காலம் வரும்போது தூக்கி வீசுவோம். எமது இயக்கத்தின் ...

...கள். அமைப்பாளர்கள் சிறையில் இருக்கிறார்கள். அவர்களின் எண்ணப்படியே தான் நாங்கள் இயங்குறோம்'' என்றார்.

இறைகுமாரன் பேசுகையில் பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்தால்தான் இனப்பிரச்சினை தீரும் எனும் கம்யூனிசக்கொள்கையை எமக்கு வேண்டாம். இனப்பிரச்சினை தீர்ந்தால் தான் பொருளாதாரம் வளரும் — முதலில் சுதந்திரம் பின்புதான் சோறு.எமது பிரதேசம்காப்பாற்றப்படவேண்டும் இதற்கு இளைஞர்கள் முன்வரவேண்டும். இதுவரை அரசு தமிழர் பகுதி பொருளாதார அபிவிருத்தியில் கவனம் செலுத்தவில்லை. இது வேண்டுமென்ற புறக்கணிப்பு. ஆகவே சுதந்திரம் முக்கியம்'' என்றார்.

விக்கினராசா பேசுகையில் மலையகத்தமிழனும் எமது உடன் பிறப்புக்களே. அவன் அடக்கி ஆளப்படுகிறான். உரிமையற்றவனாக வாழ்கிறான். ஆகவே த. விடுதலை கூட்டணி மலையகத் தமிழன் விடயத்தில் விழிப்பாயிருப்பதுடன் த. இ. பேரவையினரும், மலையகத்தில் தங்கள் கிளைகளை அமைத்து செயல்படவேண்டும் என்றார்.

கனகமனோகரன் பேசுகையில், சாதியை சட்டத்திறைல் மட்டும் ஒழித்துக்கட்டமுடியாது. நாங்கள் ஒவ்வொருவரும் சாதியொழிப்பு நடவடிக்கையில் முன்னின்று உழைக்க முன்வரவேண்டும். ஆலயக்கதவுகளை திறக்க முன்வரவேண்டும். திறக்க ...த்துவிடவும் தயங்கக் கூடாது. சாதியை ஒழிக்கும் வரை தொடர்ந்துபோராட த. விடுதலைக் கூட்டணி முன்வரவேண்டும் என்றார்.

பாலேந்திரா பேசுகையில் 1972 குடியரசு தொடக்கம் இளைஞர்கள் சிறையில் இருந்துகொண்டுவருகிறார்கள். பலர் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்கள். பலர் விடுதலை பெறவில்லை. தொடர்ந்து கைதுசெய்யப்படுகிறார்கள். இவர்களின் குடும்பங்கள் படும் தொல்லைகள் ஏராளம். இவர்களின் குடும்பங்கட்கு ஆறுதல் கூறும் அதே வேளையில் அனைவரையும் விடுதலை செய்யக்கூடிய நடவடிக்கையில் த. விடுதலைகூட்டணி முன்வரவேண்டும் என்றார்.

பன்னீர் செல்வம் பேசுகையில் நாங்கள் விடுதலை என்கின்ற முடிவில் நின்றுகொண்டிருக்கிறோம். ஒப்பந்தம் பேச்சுவார்த்தை என்பவற்றில் காலத்தைக் கடத்துவதில் இனிமேல் பிரயோசனமில்லை. ........................ ............... ... கடந்த காலங்களில் டட்லி-பண்டா ஆட்சிகளிலும் நாங்கள் ஏமாந்த சரித்திரங்களை நாங்கள் மறக்கவில்லை. இந்தப்பாடங்கள் எமக்கு ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிறது. கவிக்குயில் காசி அண்ணா கூறியபடி நாம் செயல்படுவோம் என்றார்.

மதிமுகராசா பேசுகையில் குடும்பக் கட்டுப்பாடு தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ள சாபக்கேடு. இதன்மூலம் தமிழ், முஸ்லிம்களை அழித்து ஒழிக்கவே அரசு திடசங்கற்பம் கொண்டுள்ளது. ஆகவே நாம் இந்த கொடிய குடும்பக் கட்டுப்பாட்டில் விழிப்பாயிருக்கவேண்டும், இல்லாவிடில் சிறுபான்மையினராகிய நாம் அழிவது திண்ணம். அனைவரும் நிறையப் பிள்ளைகள் பெற்று எமது இனம் வாழப் பாடுபடவேண்டும் என்றார்.

சு. க. மகேந்திரன் ''தமிழா திரும்பிப்பார்'' நூலை வெளியிட்டுவைத்தார். திரு. பூ. கணேசலிங்கம் அதன் முதல் பிரதியை வாங்கினார்.

---

### கிளிநொச்சி பட்டின சபைக்கும் சிங்கள ஆணையாளர்!

தமிழ் ஈழத்தில் சிங்கள 'கொலோனியலிசம்' மேலும் மேலும் விஸ்தரிக்கப்படுகிறது. திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, ஆகியவற்றின் நகர, மாநகர சபைகள் கலைக்கப்பட்டு அங்கு சிங்கள ஆணையாளர் நியமிக்கப்பட்டது போல — இப்போது அமைச்சர்குமாரசூரியர் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதாகச்சொல்லப்படும் கிளிநொச்சித் தொகுதியின் தலைநகரான கிளிநொச்சிப் பட்டின சபையின் ஆணையாளராக 'பேர்ட்டி சில்வா' என்ற சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

"தமிழ் மக்களை — தமிழ் வரியிறுப்பாளர்களை நூற்றுக்கு நூறுவீதம் கொண்ட கிளிநொச்சி பட்டினசபையின் ஆணையாளராக சிங்களவர் ஒருவரை நியமித்து தமிழ் மக்களை அவமானப்படுத்தும் குமாரசூரியரின் அரசு எஞ்சியுள்ள இரண்டொரு உள்ளூராட்சிமன்றங்களுக்கும் கூட சிங்களவரையே நியமித்து தனது காலனித்துவ ஆசையை பூர்த்திசெய்து கொள்ளலாமே'' என்று கேலியும் ஆத்திரமும் நிறைந்த குரலில் கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரி சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

---

### வட்டுக்கோட்...

—1-ம் பக்கத் தொடர்

டாக்டர் உதுமா லெப்பை ஆகியோர் தலைமையிலும் இந்த இயக்கம் நடைபெறுகிறது

---

### அமைச்சர்கள் விருந்...

—2-ம் பக்கத் தொடர்

இதற்கெல்லாம் காரணம் தமிழனைப் பிறந்ததுதான் அன்றி வேறில்லை.

தமிழுணர்ச்சி கரைபுரண்டோடும் போது, தமிழ் உரிமைப் போராட்டம் வெகுசன இயக்கமாகபரவும் போது இதுகளும் அதுகளும் அந்த அனல் காற்றில் சிக்கி பஸ்மீகரமாகிவிடும். கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம் கண்டிப்பாக மாறும்.

— அப்பலோ —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

## தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை குமாரசூரியரும் ஆதரிக்கிறாரா?

"தமிழ் மக்கள் தமது உரிமைகளையாரிடமும் கேட்டுப் பெறமுடியாது. அவர்கள் தமது உரிமைகளை தாமாகவே பெற்றுக்கொள்ள வேண்டும். தமிழன் தன்மானமும் தன்னம்பிக்கையுள்ளவனுமாக வாழ, தானே தனது உரிமையைப் பெற்றுக் கொள்ளவேண்டும்!"

—இவ்வாறு தபாலமைச்சர் குமாரசூரியர் கூறியிருக்கிறார். (ஆதாரம் வீரகேசரி 18-5-76)

## தியாகி சிவகுமாரன் நினைவு தினம்

தியாகி சிவகுமாரனின் நினைவு தினம் எதிர்வரும் 5-6-76ல் உரும்பராயில் அனுட்டிக்கப்படவுள்ளது. சிவகுமாரனது சமாதியில் விசேட அஞ்சலி, சிவகுமாரனது சிலைக்கு மாலை அணிவித்தல், பொதுக்கூட்டம் என்பன நடைபெறவுள்ளது.

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய நிர்வாகிகள்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகம் ஏழு துறைகளாகப்பிரிக்கப்பட்டு ஒன்பது செயலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒன்பது செயலாளர்களின் நடவடிக்கைகள் இரண்டு செயலதிபர்களின் மேற்பார்வையின்கீழ் இயங்கும்.

சு. நடராசா தலைமைச் செயலக நிர்வாகத்துக்கு பொறுப்பான செயலாளராகவும், அமைப்புச் செயலாளராக திரு. சே. மா. செல்லத்தம்பு பா. உ. அவர்களும், கொள்கை பரப்பு—பிரச்சார செயலாளர்களாக வி. தருமலிங்கம் பா. உ, வி. ஆனந்தசங்கரி பா. உ. ஆகியோரும், தொழிற்சங்கத்துறை செயலாளராக அடலேறு மு. ஆலாலசுந்தரமும், இளைஞர் அமைப்பு செயலாளர்களாக காசி ஆனந்தன், வி. யோகேஸ்வரன் ஆகியோரும், சட்டத்துறைக்குப் பொறுப்பாக சட்டத்தரணிகள் சாம் தம்பிமுத்து, இ. விஸ்வநாதன் ஆகியோரும் செயலாற்றுவர்.

இவை அனைத்துக்கும் தலைமைச் செயல் அதிபர்களாக நாவலர் அமிர்தலிங்கமும், உடுப்பிட்டி சிவசிதம்பரமும் கடமையாற்றுவர்.

பொருளாளர்களாக திருவாளர்கள் தா. திருநாவுக்கரசு, சி. கதிரவேலுப்பிள்ளை, அ. தங்கத்துரை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கூட்டணியின் தலைவர்களாக தமிழர் தந்தை மூதறிஞர் சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுடன், திரு. கா. பொ. பொன்னம்பலம், சௌ. தொண்டமான் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

துணைத்தலைவர்களாக, திருவாளர்கள் வி. என். நவரத்தினம் மு. மாணிக்கம், ஜேசுடீ. வாஸ், பி. வி. கந்தையா நா. த. செல்லத்துரை, தா. சங்கரப்பிள்ளை, எஸ் தம்பித்துரை ஆகிய ஏழுபேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தவிர நடவடிக்கைக் குழுவுக்கு 15பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எல்லாமாக மொத்தம் 393பேரைக் கொண்டதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழு இயங்கும்.

நடவடிக்கைக்குழுகூட்டம் சாதாரணமாக ஒவ்வொரு மாதமும் முதலாவது சனிக்கிழமையன்று நடைபெறும்.

பொதுக்குழு மூன்று மாதத்துக்கு ஒரு தடவை கூடும் நடவடிக்கைக்குழுவின் மூன்று கூட்டங்களுக்கு தகுந்த காரணமின்றி தொடர்ச்சியாகச்செல்லாதவர்கள் நடவடிக்கைக் குழுவிலிருந்து நீக்கப்பட்டு அந்த இடத்துக்கு புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

நடவடிக்கைக்குழுவின் அடுத்த கூட்டம் 5—6—76 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

## சூரியர் விஜயம் ஏழாலையில் பகிஷ்கரிப்பு!

ஏழாலை தன்மானத் தமிழ் மக்கள் நிறைந்துள்ள கிராமம், உடுவில் தொகுதியைச் சேர்ந்தது. வி. தர்மலிங்கம் பா. உ. அவர்களின் கோட்டை, இங்கு மின்சார உப நிலையம் ஒன்றைத் திறந்து வைக்க, பொலிசாரும், சி. ஐ. டி. யினரும், புடை சூழ சென்றவாரம் குமாரசூரியர் சென்றிருந்தபோது ஐ. ச. தலைவர் சிவகுருவைத் தவிர வேறு பொதுமக்கள் எவருமே அங்கு செல்லவில்லையாம். ஏழாலை கிராமத்து மக்கள் இந்நிகழ்ச்சியை முற்றாகப்பகிஷ்கரித்துகுமாரசூரியர் முகத்தில் கரிபூசினராம்.

## காங்கேசன்துறையில் தமிழ் மகளிர்பேரவை அங்குரார்ப்பணம்

தமிழ் மகளிர் பேரவையின் கிளையொன்று காங்கேசன்துறையில் 23-5-76 ஞாயிற்றுக்கிழமை தொடக்கி வைக்கப்படும்.


3-வது வாரம்

செல்லமகால்

சுஜாதா, கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி, ஸ்ரீபிரியா, தேவகி மற்றும் பலர் நடித்த-

ஜனாதிபதி விருது பெற்ற

'அவள் ஒரு தொடர் கதை'

திரைக் கதை—வசனம் டைரக்ஷன்— கே. பாலச்சந்தர் B.Sc.

தயாரிப்பு:- இராம அரங்கண்ணல்

2-வது வாரம்

கெபிட்டி

ஜெமினி-தேவிகா, முத்துராமன் ரங்கராவ், ரி. எஸ். பாலையா

நடித்த

வாழ்க்கைப் படகு

3வது வாரம்

கெப்பிட்டல்—பிளாசா

நடிகர் திலகம் சிவாஜி (இரட்டை வேடம்) உஷா, நந்தினி, மேஜர் சுந்தரராஜன், நாகேஷ், பண்டரிபாய், வி. கே. ராமசாமி, ரமா பிரபா, நடித்த—

கௌரவம்

(ஈஸ்ட்மென் கலர்)

லிடோ (யாழ் நகர்) 2-வது வாரம்

சிவாஜி, ஜெயலலிதா, விஜயகுமார், சுந்தரராஜன் —நடித்த

அன்பைத்தேடி

(ஈஸ்ட்மன் கலர்)

கிங்ஸ்லி 11வது வாரம்

சிவகுமார் கமலஹாசன் ஜெயசுதா —நடித்த

மேல்நாட்டு மருமகள்

(கலர்)

வெலிங்டன் 4 வது வாரம் —யாழ்நகர்

சீர்காழி கோவிந்தராஜன், டி. ஆர். மகாலிங்கம் நடித்த-

அகஸ்தியர்

(கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி ,194 ஏ இலக்கத்தில் 1976ம் வருடம் மே மாதம் 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.